People's Watch
No.6, Vallabai Road, Chokkikulam, Madurai - 625 002.
Phone: 0452-2531874 & 2539520 Fax: 0452- 2531874
E.mail: info@pwtn.org Web: www.pwtn.org

**மாண்புமிகு. தமிழக முதல்வர் அவர்கள்,**
தமிழ்நாடு அரசு,
தலைமைச் செயலகம்,
சென்னை 600 009.

பேரன்புடையீர்

மக்கள் கண்காணிப்பகத்தின் இனிய வணக்கங்கள்.

மதுரையைத் தலைமையிடமாகக் கொண்டு மக்கள் கண்காணிப்பகம் அமைப்பு கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக மனித உரிமை செயல்பாட்டுத் தளத்தில் இயங்கி வருகிறது. கடந்த ஆண்டு முதல் சித்ரவதைத் தடுப்பிற்கான தேசியத் திட்டத்தில் இந்தியா முழுவதிலுமுள்ள 10 மாநிலங்களிலும் செயல்பட்டு வருகிறது.

எவ்வித அரசியல் கட்சி சார்புமின்றியும், தனி நபர் மீதான விருப்பு, வெறுப்புக்களைக் கடந்தும், மனித உரிமை அரங்கில் அரசைக் கண்காணித்து மனித உரிமைக் கலாச்சாரத்தை வளர்த்தெடுக்கும் விதமாக எங்களது பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

தாங்கள் இச்சம்பங்களில் உடனடியாக தலையிட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம்.

நம்பிக்கையுடன் மனித உரிமைப் பணியில்

(ஹென்றி டிபேன்)
நிர்வாக இயக்குநர்

நகல்கள்
1. அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும்
2. அனைத்து மாவட்ட காவல்துறைக் கண்காணிப்பாளர்களுக்கும்
3. அனைத்து அரசியல் கட்சிகளுக்கும்

# தமிழகத்தில் மனித உரிமை மீறல்கள் - தொகுப்பு
# 17.12.2009 முதல் 31.12.2009 முடிய

| வ. எண் | செய்தி கிடைத்த நாள் | மாவட்டம் / பெயர் விபரம் மற்றும் சம்பவ விபரம் | பிரிவு | தகவல் பெற்றது. |
|---|---|---|---|---|
| 89. | 17.12.09 | **சென்னை மாவட்டம்:** தேனாம்பேட்டை–யைச் சேர்ந்தவர் ஹேமலதா(35), இன்டர்வியூக்கு சென்றிருந்த தனக்கு மயக்க மருந்து காபி கொடுத்து ஈஸ்வரஸ்ரீகுமார் கற்பழித்ததாக புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினத்தந்தி |
| 90. | 17.12.09 | **ஈரோடு மாவட்டம்:** கோபி அருகேயுள்ள பழனிக்கவுண்டன்புதூர் பகுதியில் உள்ள மக்களுக்கு சுடுகாட்டு வழித்தடம் தனியாருக்கு சொந்தமானது உடல்நலக்குறைவாள் அம்மாசையம்மாள் என்பவர் இறந்துவிட்டார். பிரேதம் புதைப்பதில் தகராறு காரணமாக கோஷ்டி மோதல். | கோஷ்டி மோதல் | தினகரன் |
| 91. | 18.12.09 | **மதுரை மாவட்டம்:** கூடல் நகரை அடுத்த பாசிங்காபுரத்தை சேர்ந்தவர் பிரபாகரன், மனைவி நாகஜோதி(23), கணவன் மனைவியிடையே தகராறில் நாகஜோதி மண்ணெண்ணெய் ஊற்றி தற்கொலைக்கு முயன்றதாக புகார் | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினத்தந்தி |
| 92. | 18.12.09 | **மதுரை மாவட்டம்:** மேலூரில் இருந்து 3 லாரிகளில் கடத்தப்பட்ட 960 மூட்டை ரேசன் அரிசியை தர்மபுரி தனிப்படை போலீசார் பறிமுதல் செய்தனர். மேலூரில் கடத்துவதற்குகாக இருந்த 500 மூட்டை ரேசன் அரிசியும் லாரியுடன் பிடிபட்டது. | ரேசன் அரிசி கடத்தல் | தினத்தந்தி |
| 93. | 18.12.09 | **மதுரை மாவட்டம்:** அலங்காநல்லூரை சேர்ந்தவர் வாசு(28), வழிப்பறி வழக்கில் சிறையில் இருந்த அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டது. | காவல் நிலைய வன்முறை | தினமலர் |
| 94. | 18.12.09 | **மதுரை மாவட்டம்:** திருமங்கலம் விடத்தாகுளத்தைச் சேர்ந்தவர் கோவிந்தராஜன் மகன் ஆனந்த முத்துப்பாண்டி(6) பள்ளி வளாகத்தில் விளையாடி கொண்டிருந்தான் பக்கத்து கண்மாயக்குள் மண் அள்ளுவதற்காக வந்த டிராக்டர் மோதியது சிறுவன் பலி. | குழந்தைகளுக்கு எதிரான வன்முறை | தினமலர் |
| 95. | 18.12.09 | **மதுரை மாவட்டம்:** உசிலம்பட்டி ராமுத்தேவர் தெருவை சேர்ந்தவர் ராஜாகிளி மகள் கோகிலா(15) 10ம் வகுப்பு படித்து வந்தார். இந்நிலையில் தீடீரென மண்ணெ்ணயை ஊற்றி தற்கொலை செய்து கொண்டார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | மாலை மலர் |
| 96. | 18.12.09 | **சென்னை மாவட்டம்:** மறைமலைநகர் கலைவாணர் தெருவில் வசித்து வருபவர் மதுசூதனன் மனைவி சரிதா(22), வேலை முடிந்து | பெண்களுக்கு எதிரான வன்முறை | மாலைமலர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மாலையில் வீடு திரும்பிய மதுசூதனன் வீட்டுக்கு வந்த போது சரிதா கொலை செய்யப்பட்டு பிணமாக கிடந்ததாக புகார். | | |
| 97. | 19.12.09 | **மதுரை மாவட்டம்:** அருப்புகோட்டையை சேர்ந்தவர் வீரச்சாமி நாயுடுவின் மனைவி கிருஷ்ணவேணி(75), இவரது மகன் ராஜ்குமார் சொந்த வீட்டிற்கு வந்தால் கொலை மிரட்டல் விடுவதாக புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினத்தந்தி |
| 98. | 19.12.09 | **விழுப்புரம் மாவட்டம்:** ரிஷிவந்தியம் ஒன்றியம் அத்தியூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலை பள்ளியில் அந்தோணி(45), தலைமை ஆசிரியராக உள்ளார். 6–வது படிக்கும் மாணவிகளிடம் சில்மிஷம் செய்ததாக பெற்றோர்கள் புகார். | பள்ளி வன்முறை | தினமலர் |
| 99. | 19.12.09 | **தஞ்சை மாவட்டம்:** சவேரியார் கோவில் தெருவை சேர்ந்தவர் கருணாநிதி மகள் உமா(20), கஸ்பர்ராஜ்(28), உமாவை கடத்தி சென்று கற்பழித்ததாக புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | மாலைமுரசு |
| 100. | 19.12.09 | **சென்னை மாவட்டம்:** பழவந்தாங்கல் எம்எம்டிசி காலனியை சேர்ந்தவர் பொன்பாண்டி(55), மகள் ஜெயக்கொடி ஆறுமுகம்(30) ஜெயக்கொடியை திருமணம் செய்து வைக்கும்படி கேட்டுள்ளார். பெற்றோர் மறுத்ததால் கொலை மிரட்டல் விடுத்ததாக புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினகரன் |
| 101. | 19.12.09 | **காஞ்சிபுரம் மாவட்டம்:** சென்னையில் குன்றத்தூர் ஸ்ரீபெரும்புதூர் வழியாக. லாரியிலிருந்து 13 டன் எடை கொண்ட 260 ரேசன் அரிசி மூட்டைகள் பறிமுதல் செய்யப்பட்டது. | ரேசன் அரிசி கடத்தல் | தமிழ்சுடர் |
| 102. | 20.12.09 | **மதுரை மாவட்டம்:** திண்டுக்கல் பொதுப்பணிதுறை காலனியைச் சேர்ந்த மகாராஜன், மகன் சரவணக்குமார்(27), இவர் சுஜிதாவும்(25), காதலித்தனர். தன்னை மறுத்த காதலன் வீட்டிற்கு போய் ஏற்றுக்கொள்ளுமாறு சுஜிதா உண்ணாவிரதம் இருந்தார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமலர் |
| 103. | 20.12.09 | **திருச்சி மாவட்டம்:** திருச்சியை சேர்ந்த வேலு, மனைவி தனலட்சுமி, இருவரும் குறி சொல்வதை வாடிக்கையாக கொண்டுள்ளனர். அருகில் வசிக்கும் முனியம்மாள், வேலு குறி சொல்வதற்கு எதிர்ப்பு இருதரப்பினருக்கும் கைகலப்பு ஏற்பட்டது. | மோதல் | தினமலர் |
| 104. | 20.12.09 | **திருச்சி மாவட்டம்:** பாலக்கரை கெம்ஸ்டவுனை சேர்ந்த அல்லாபிச்சை(29), சிறை கைதியான இவருக்கும், குமாரசாமி சூசை சிறையில் செல்போன் பயன்படுத்தியதை அல்லாபிச்சை சிறை அதிகாரிகளிடம் கூறியதால் சூசையின் கூட்டாளியான குமாரசாமி, கொதிக்கும் எண்ணெயை அல்லாபிச்சை மீது | காவல் நிலைய வன்முறை | தினமலர் |



மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஊற்றினர். | | |
| 105. | 20.12.09 | **மதுரை மாவட்டம்:** சோலையழகுபுரம் ஜானகிநகர் முதலாவது குறுக்குத் தெருவை சேர்ந்தவர் குருசாமி மகள் சுமதி(24), கணவர் காளிதாஸ்(31), விவாகரத்து கேட்டு சுமதியை பிளேடால் காளிதாஸ் வெட்டியதாக புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமலர் |
| 106. | 20.12.09 | **மதுரை மாவட்டம்:** மேலூர் வைத்தியநாத அய்யர் வீதியைச் சேர்ந்தவர் வீரன் மகள் மீனாட்சி(19), மகேஷ்முரளி இருவரும் காதலித்தனர் திருமணம் செய்து கொள்வதாக ஆசை வார்த்தை கூறி ஏமாற்றியதாக புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்சுடர் |
| 107. | 20.12.09 | **மதுரை மாவட்டம்:** உசிலம்பட்டி ராமத்தேவர் வீதியைச் சேர்ந்தவர் ராஜகிளி மகள் கோகிலா(17) +2 மாணவியான அவர் அதே பகுதி மாணவரை காதலித்து வந்ததால் பெற்றோர்கள் கண்டித்தனர். இதனால் மனம் உடைந்த கோகிலா தூக்குபோட்டு தற்கொலை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்சுடர் |
| 108. | 20.12.09 | **மதுரை மாவட்டம்:** புதுச்சேரி தீண்டாமை ஒழிப்பு ஆலோசனைக்குழு கூட்டம் எல்.களிவரதன் தலைமையில் நடைபெற்றது. தலீத் மக்களுக்கான சிறப்பு கூறு திட்ட நிதியை புதுவை அரசு முறையாக செலவு செய்யவில்லை என புகார். | தலீத் வன்முறை | தீக்கதிர் |
| 109. | 21.12.09 | **தர்மபுரி மாவட்டம்:** பெரும்பாலை கோடம்பட்ட மேல்காடு பகுதியை சேர்ந்தவர் கருமலை(52), மனைவி நாகம்மாள்(47), கணவன், மனைவி தகராறில் கருமலை நாகம்மாளை கத்தியால் குத்தி கொலை செய்ததாக புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | காலைக்கதிர் |
| 110. | 21.12.09 | **மதுரை மாவட்டம்:** வாடிப்பட்டி அருகே விராலிபட்டியை சேர்ந்தவர் ராஜசேகரன் மகன் முகிலரசன்(20), விருதுநகரில் பாலிடெக்னிக் கல்லூரியில் 2ம் ஆண்டு படித்து வந்தார். முகிலரசன் விஷம் குடித்து தற்கொலை செய்து கொண்டார். விடுதியின் காப்பாளரும், துணை காப்பாளரும் தனது மகனை மனரீதியாக தொந்தரவு செய்ததாக புகார். | மாணவர்களுக்கு எதிரான வன்முறை | தினகரன் |
| 111. | 21.12.09 | **கோவை மாவட்டம்:** பொள்ளாச்சி வழியாக கேரளாவுக்கு வேனில் கடத்தப்பட இருந்த 50 கிலோ கொண்ட 70 மூட்டை ரேசன் அரிசி பறிமுதல். | ரேசன் அரிசி கடத்தல் | தினகரன் |
| 112. | 21.12.09 | **நெல்லை மாவட்டம்:** நெல்லைபேட்டை ஸ்காட் மழலையார் மற்றும் தொடக்கப்பள்ளி மாணவிகளிடம், ஆசிரியர் பாலாஜி சில்மிஷம் செய்ததாக மாணவிகளின் பெற்றோர்கள் போலீசில் புகார். | பள்ளி வன்முறை | தினத்தந்தி |
| 113. | 21.12.09 | **கன்னியாகுமரி மாவட்டம்:** நாகர்கோவில் பார்வதிபுரம் ஓமியோபதி தெருவை சேர்ந்தவர் | பெண்களுக்கு எதிரான | தினத்தந்தி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ராமசந்திரன் மகள் சத்யா(27), இவரது கணவர் சதிஷ்(29), கணவன்–மனைவி பிரச்சினையில் சத்யா விஷம் குடித்து தற்கொலை. | வன்முறை | |
| 114. | 21.12.09 | **தர்மபுரி மாவட்டம்:** காரிமங்கலத்தைச் சேர்ந்தவர் கந்தசாமி, மனைவி ஜானகி மகன் நவீன்(10), ஜானகி சிறுவனை கயிற்றால் கட்டி வாயில் சூடுபோட்டு, ஊசியாலும் குத்தி கொடுமைபடுத்தியதாக புகார் | குழந்தைகளுக்கு எதிரான வன்முறை | காலைக்கதிர் |
| 115. | 21.12.09 | **ராமநாதபுரம் மாவட்டம்:** புதுமடம் ஊராட்சி சத்திரம் தெற்கு தெருவில் ஒன்றிய தொடக்கப்பள்ளி 260 ஏழை மீனவ குழந்தைகள் படித்து வந்தனர். பள்ளி துவங்கிய நாளில் இருந்து இன்று வரை சத்துணவு வழங்கப்படவில்லை பொதுமக்கள் புகார். | பள்ளி வன்முறை | தினமலர் |
| 116. | 21.12.09 | **மதுரை மாவட்டம்:** மணிநகரம் ராஜா மில்ரோடு பகுதியைச் சேர்ந்தவர் தங்கம் மகள் தமிழ்ச்செல்வி, கணவர் சிவராமன், மற்றும் குடும்பத்தார். வரதட்சணைக் கேட்டு கொடுமைபடுத்துவதாக போலீசில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமணி |
| 117. | 21.12.09 | **தர்மபுரி மாவட்டம்:** இலக்கியம் பட்டி பஞ்சாயத்துக்கு உட்பட்ட வெண்ணாம்பட்டி பகுதியில் மாயணத்தை தனியார் ஆக்கிரமிப்பு செய்ததாக பொது மக்கள் புகார். | ஆக்கிரமிப்பு | காலைக்கதிர் |
| 118. | 21.12.09 | **தேனி மாவட்டம்:** கேரளாவிற்கு மணல் கடத்துவதாக போடி வட்டாட்சியர் ராஜசேகரனை மணல் கொள்ளையர்கள் வரவழைத்து மேலச்சொக்கநாதபுரத்தைச் சோந்த பாபு, பொன்ராஜ், லட்சுமணன், கண்ணன், ரமேஷ், சுந்தரேசன், காளியப்பன், தாக்கியதாக புகார். | மணல் கடத்தல் | தீக்கதிர் |
| 119. | 22.12.09 | **தர்மபுரி மாவட்டம்:** நரசிம்மமாச்சாரி தெற்கு தெருவை சேர்ந்தவர் முருகன் மனைவி இளையராணி(29), சத்தியாவை வேலையை விட்டு நிறுத்தியதால் காதலன் சக்திவேல் இளையராணியை மிரட்டியதாக புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினத்தந்தி |
| 120. | 22.12.09 | **தர்மபுரி மாவட்டம்:** அரூர் கோட்டப்பட்டி அருகே உள்ள நாகமரத்துப்பள்ளம் கிராமத்தைச் சேர்ந்தவர் உண்ணாமலை (35) கட்டியப்பன்(37), பூபதி(25), இருவரும் தாக்கியதாக புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தீச்சுடர் |
| 121. | 22.12.09 | **இராமநாதபுரம் மாவட்டம்:** முதுகுளத்தூர் அருகே மகிண்டி குடியிருப்பைச் சேர்ந்தவர்களுக்கு இலவச நிலத் திட்டத்தின் கீழ் பட்டா வழங்கப்பட்டது. ஆத்திரமடைந்த கிராமத்தினர் 5 குடும்பத்தையும் ஒதுக்கி வைத்தனர். | தலித் வன்முறை | தினகரன் |
| 122. | 22.12.09 | **மதுரை மாவட்டம்:** ரிங்ரோடு ‘டோல்கேட்’களில் (சுங்கச்சாவடிகள்) | லஞ்சம் | தினமலர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மாநகராட்சி கட்டுப்பாட்டில் இயங்குகின்றன. வாகனங்களில் வருபவர்களிடம் சுங்கவரி வசூலில் ஈடுபடுகின்றனர் ஆனால் ரசீது வழங்கப்படவில்லை என புகார். | | |
| 123. | 22.12.09 | **தர்மபுரி மாவட்டம்:** மொரப்பூர் குருபர அள்ளியைச் சேர்ந்தவர் கோபால், மனைவி ருக்கு(50), மின்சார ஒயரில் மரைக்கிளை மோதியதால் அதனடியில் நின்றிருந்த ருக்கு, மின்சாரம் பாய்ந்து அதே இடத்தில் இறந்தார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்முரசு |
| 124. | 22.12.09 | **தர்மபுரி மாவட்டம்:** அரூர் வேப்பிலைப்பட்டி காலனி பெரியார் நகரை சேர்ந்தவர் செழியன், மனைவி இந்திரா, பாத்ரூமில் குளிப்பதை சேகர்(36), மறைந்து நின்று பார்த்ததாக புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | காலைக்கதிர் |
| 125. | 22.12.09 | **சென்னை மாவட்டம்:** சென்னையை அடுத்த மணலி பலராமன் தெருவை சேர்ந்தவர் செல்வராஜ் (35), இவர் டியூசன் சென்டர் நடத்தி வருகிறார். பிளஸ்–1 படிக்கும் ஒரு மாணவியை ஆசைவார்த்தை கூறி செக்ஸ் வைத்து படம் பிடித்து 'ப்ளு டுத்' மூலம் நண்பர்களுக்கு அனுப்பியதாக புகார். | பள்ளி வன்முறை | தினத்தந்தி |
| 126. | 22.12.09 | **சிவகங்கை மாவட்டம்:** தொண்டி அருகே உள்ள முகிழ்த்தகம் கிராமத்தில் அரசு நடுநிலைப்பள்ளி உள்ளது. இங்கு சத்துணவு வழங்குவது இல்லை அதனால் பள்ளியை புறக்கணிக்க மக்கள் முடிவு செய்துள்ளனர். | அரசு தன் கடமை செய்யாதை | தினகரன் |
| 127. | 22.12.09 | **புதுக்கோட்டை மாவட்டம்:** ஆலங்குடியை அடுத்த அய்யன்காட்டை சேர்ந்தவர் ரங்கசாமி, மனைவி சாந்தி (24), இவருக்கு தோல் வியதி தனியார் ஆஸ்பத்திரியின் டாக்டர் செல்லப்பன் இவரது மனைவியும் உதவியாளாருமான ஜெயசித்ரா காந்திக்கு ஊசி போட்டார் சிறிது நேரத்தில் காந்தி இறந்து விட்டதாக புகார். | மருத்துவர்கள் அலட்சியம் | மாலைமலர் |
| 128. | 22.12.09 | **விழுப்புரம் மாவட்டம்:** பண்ருட்டி அடுத்த திருவாயூரை சேர்ந்தவர் பெருமாள் மகள் தேவி(25) குடும் தகராறில் தேவி எரித்து கொலை செய்யப்பட்டதாக தந்தை புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | மாலைமலர் |
| 129. | 22.12.09 | **விருதுநகர் மாவட்டம்:** அருப்புகோட்டை அருகே பந்தல்குடியில் தலித் அருந்ததியர் மக்கள் மீது காவல்துறை பொய் வழக்கு போட்டதை கண்டித்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நடைபயணம் –ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. | தலித்துகள் எதிரான வன்முறை | தீக்கதிர் |
| 130. | 22.12.09 | **சிவகங்கை மாவட்டம்:** வல்லகுளம் கிராமத்தை சேர்ந்த முத்துராஜா(19), சிவகங்கை மன்னார் கல்லூரியில் பிஎஸ்.சி. முன்றாம் ஆண்டு படித்து வந்தார். காய்ச்சலுக்கு சிவகங்கை அரசு மருத்துவமனையில் நர்ஸ் ஊசி போட்ட சிறிது நேரத்தில் இறந்ததாக புகார். | மருத்துவர்கள் அலட்சியம் | தீக்கதிர் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| 131. | 23.12.09 | **மதுரை மாவட்டம்:** சமயநல்லூர் அருகே வயலூரை சேர்ந்தவர் ரமேஷ்(18) அரசு விடுதியில் தங்கி மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரியில் இரண்டாமாண்டு பி.காம், படித்து வந்தார். விடுதியில் பாம்பு கடித்ததால் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு டாக்டரின் தவறான சிகிச்சையால் இறந்ததாக புகார். | டாக்டர்கள் அலட்சியம் | தினமலர் |
| 132. | 23.12.09 | **மதுரை மாவட்டம்:** ஜராவதநல்லூர் பகுதியை சேர்ந்தவர் ராசு, மனைவி சரசு(64), தீவிர வயிற்று வலி காரணமாக சரசு மண்ணெ்ணையை ஊற்றி தீ வைத்து கொண்டார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினத்தந்தி |
| 133. | 23.12.09 | **காஞ்சிபுரம் மாவட்டம்:** மச்சேஸ்வரர் கோவில் அர்ச்சகர் தேவநாதன்(35), பல பெண்களுடன் செக்ஸ் வைத்தாக புகார் எழுந்தது அதை அவரே செல்போனில் படம் பிடித்ததாகவும் ஒரு பெண் போலீசில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினத்தந்தி |
| 134. | 23.12.09 | **கரூர் மாவட்டம்:** குளித்தலை அருகே உள்ள கோட்டையார் தோட்டத்தை சேர்ந்தவர் நடராஜன், இவர் பொய்யாமணி கிராம வி.ஏ.ஓ., உள்ளார். கோரப்பட்டியை சேர்ந்த விவசாயி மூக்கன். வங்கி கடன் வாங்குவதற்கு அடங்கல் சான்று கேட்டார். அதற்கு வி.ஏ.ஓ. ரூ.1000 லஞ்சம் கேட்டதாக புகார். | லஞ்சம் | தினகரன் |
| 135. | 23.12.09 | **ராமேஷ்வரம் மாவட்டம்:** மீனவர்கள் நேற்று முன்தினம் 450 விசைப்படகுகளில் கச்சத்தீவு அருகே மீன் பிடித்துக் கொண்டிருந்த போது இலங்கை கடற்படையினர் சுமார் 10 படகுகளை தாக்கியதாக மீனவர்கள் புகார். | மீனவர்களுக்கு எதிரான வன்முறை | தினகரன் |
| 136. | 23.12.09 | **மதுரை மாவட்டம்:** வல்லானந்தபுரத்தைச் சேர்ந்தவர் கோபி(31), மனைவி பஞ்சுமணி (28), கணவன் மனைவியிடையே ஏற்பட்ட தகராறில் பஞ்சுமணி மண்ணெண்ணெயை ஊற்றி தீ வைத்து கொண்டதாக புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்சுடர் |
| 137. | 24.12.09 | **மதுரை மாவட்டம்:** அவனியாபுரத்தில் உள்ள திருப்பரங்குன்றம் ரோடு பகுதியை சேர்ந்தவர் முருகன் மனைவி மீனா(28), கணவன் மனைவியிடையே ஏற்பட்ட தகராறில் மீனாள் தூக்குபோட்டு தற்கொலை செய்து கொண்டார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | மாலைமலர் |
| 138. | 24.12.09 | **புதுக்கோட்டை மாவட்டம்:** ஆலங்குடியை அடுத்த கும்மங்குளத்தை சேர்ந்தவர் முருகேசன்(35), மனைவி பாண்டிமீனாள் (25), மனைவியின் நடத்தையில் சந்தேகம் அடைந்த முருகேசன் மனைவியை கழுத்தை நெறித்து கொன்று கிணற்றில் வீசியதாக புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்முரசு |
| 139. | 24.12.09 | **திருவண்ணாமலை மாவட்டம்:** பெரணமல்லூர் அரசு மேல்நிலைப் பள்ளி முதுநிலை பட்டதாரி ஆகியராக பணிபுரிபவர் | பள்ளி வன்முறை | தமிழ்முரசு |



மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஜானகிராமன்(41), பிளஸ் 1, பிளஸ் 2, மாணவிகளிடம் ஆபாசமாக பேசியதாக பெற்றோர் புகார். | | |
| 140. | 24.12.09 | **தர்மபுரி மாவட்டம்:** அடுத்ததைலாபுரம் பகுதியை சேர்ந்தவர் சரவணன் (35), மனைவி கலைச்செல்வி. வரதட்சனை கேட்டு கணவர் மற்றும் குடும்பத்தினர் துன்புறுத்தியதாக புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினத்தந்தி |
| 141. | 24.12.09 | **மதுரை மாவட்டம்:** சுங்கம் பள்ளி வாசல் தெருவைச் சோந்தவர் ஜெய்லானி(28), கணவர் ஷபிஅகமது(30), தொழில் தொடங்க பணம், நகை கேட்டு சித்ரவதை செய்ததாக ஜெய்லானி போலீசில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்முரசு |
| 142. | 24.12.09 | **தேனி மாவட்டம்:** பெரியகுளம் வடகரையைச் சேர்ந்தவர் தெய்வேந்திரன் மகள் ஜீவபிரபா(21), ராம்பாபு, இருவரும் காதலித்து வந்தனர். ராம்பாபு தனது மகளை கடத்தியதாக பெற்றோர் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்முரசு |
| 143. | 24.12.09 | **மதுரை மாவட்டம்:** செக்காரனூரணி அருகே கிண்ணிமங்கலத்தில் அரசு கள்ளர் நடுநிலைப்பள்ளி உள்ளது. இங்கு 150 க்கும் மேற்பட்ட மாணவ, மாணவி படித்து வருகின்றனர். இங்கு கழிப்பறை வசதி இல்லை என புகார். | பள்ளியில் வன்முறை | தினகரன் |
| 144. | 24.12.09 | **மதுரை மாவட்டம்:** ஒத்தக்கடை ராஜகம்பீரத்தை சேர்ந்தவர் வளையாபதி, மகன் அய்யணன், இவர் கொடைக்கானல் சியோன் பள்ளியில் 9ம் வகுப்பு படித்து வந்தார். இவரை ஆசிரியர் தேவகுமார், கோல்ப் மட்டையால் அடித்ததில் வலது முழங்காலில் காயம் ஏற்பட்டதாக புகார். | பள்ளி வன்முறை | தினகரன் |
| 145. | 24.12.09 | **திண்டுக்கல் மாவட்டம்:** சீலப்பாடி மைதானத்தில் நிலை காவலர் உடல்தகுதி தேர்வு நடந்தது. இதில் போலீஸ் துறையில் பணியாற்றும் அமைச்சுபணியாளர் இருவரின் மகன்கள் கயிறு ஏறுதல் தேர்வில் தோல்வியடைந்துள்ளனர். ஆனால் தகுதி பெற்றதாக அறிவிக்கப்பட்டதில் முறைகேடு நடந்ததாக புகார். | முறைகேடு | தினகரன் |
| 146. | 24.12.09 | **சென்னை மாவட்டம்:** ஆலந்தூர் நகராட்சிக்கு உட்பட்டது ஆதம்பாக்கம். அம்பேத்கர் சிலை அருகே உள்ள திருவள்ளுவர் நடுநிலைப்பள்ளியில் 1200 மாணவர்கள், 32 ஆசிரியர்கள் செயல்பட்டு வந்தனர். இப்போது 133 மாணவர்களும், 6 ஆசிரியர்களும் உள்ளதாக புகார். | பள்ளி வன்முறை | தீக்கதிர் |
| 147. | 24.12.09 | **மதுரை மாவட்டம்:** பன்னியான் கிராமத்தை சேர்ந்தவர் பாண்டி(25), மனைவி மகேஸ்வரிக்கும்(25), விஜயராமனுக்கும் தொடர்பு இருந்தது இந்த நிலையில் மகேஸ்வரி | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்சுடர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அவரது மகன் சரண், இருவரையும் விஜயராமன் கடத்திசென்ற விட்டதாக புகார் | | |
| 148. | 24.12.09 | **சிவகங்கை மாவட்டம்:** மானாமதுரை அருகே உடைகுளம் ரயில்வே காலனியை சேர்ந்தவர் மலைச்சாமி மகள் மேனகா(28) சரவணன்(29), மேனகாவை திருமணம் செய்வதாக ஆசை வார்த்தை கூறி ஏமாற்றியதாக புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினகரன் |
| 149. | 24.12.09 | **மதுரை மாவட்டம்:** திருநகரைச் சேர்ந்தவர் ஆரோக்கிய விஜயநிர்மலா, கணவர் ஜான்பிரிட்டோ, மறுதிருமணம் செய்யப்போவதாகவும் ரூ.75 லட்சம் கேட்டு சித்ரவதை செய்வதாக போலீசில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்சுடர் |
| 150. | 25.12.09 | **சிவகங்கை மாவட்டம்:** இளையான்குடி அருகே 14 மூட்டை ரேஷன் அரிசி பறிமுதல் செய்யப்பட்டது. | ரேஷன் அரிசி கடத்தல் | தினகரன் |
| 151. | 25.12.09 | **கடலூர் மாவட்டம்:** நெல்லிக்குப்பம் அருகே விலங்கல்பட்டு கிராமத்தை சேர்ந்தவர் அழகுபாலன் மகன் பாக்கியராஜ்(21), ஜெகதீஸ்வரி (19), இருவரும் காதலித்தனர். பாக்கியராஜ் திருமணத்திற்கு மறுப்பதாக புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | மாலைமலர் |
| 152. | 25.12.09 | **மதுரை மாவட்டம்:** மேலூர் அருகே உள்ள கட்டகாளை பட்டி கிராமத்தை சேர்ந்தவர் சீமான்(32), இவரை கீழவளவு போலீஸ் இன்ஸ்பெக்டர் வழக்கு தொடர்பாக விசாரிக்க அழைத்து சென்று கொலை குற்றத்தை ஒப்புக்கொள்ளமாறு கூறி வாலிபரை துப்பாக்கியால் மிரட்டியதாக புகார் | காவல்நிலைய வன்முறை | தினத்தந்தி |
| 153. | 25.12.09 | **திண்டுக்கல் மாவட்டம்:** தாடிக்கொம்பு அருகேயுள்ள உண்டார்பட்டியைச் சேர்ந்தவர் பாண்டி மகள் சுதா(23), இரண்டாண்டு படிப்பிற்கு 97 ஆயிரம் ரூபாய் கடன் கேட்டு கனரா பாங்கிற்கு விண்ணப்பித்தார். ரூபாய் 20 ஆயிரம் கடன் தருவதாக வங்கி நிர்வாகம் கூறியதாக புகார். | ------ | தினமலர் |
| 154. | 25.12.09 | **மதுரை மாவட்டம்:** அனுப்பானடி கங்காநகர் ஸ்ரீமதி மற்றும் முத்துஜெயம் மாவு ஆலைகளில் பதுக்கி வைத்திருந்த 220 ரேசன் அரிசி மூடைகளை பறிமுதல் செய்தனர். | ரேசன் அரிசி கடத்தல் | தினமலர் |
| 155. | 25.12.09 | **சிவகங்கை மாவட்டம்:** கொல்லங்குடி சவுமியநாராயணபுரத்தை சேர்ந்த விவசாயி காளிமுத்து பயிர் காப்பீடு திட்டத்தில் விண்ணப்பிக்க உதவி அலுவலர் ஜேம்ஸ் (57), அணுகினார். அவர் ரூபாய் 200 லஞ்சம் கேட்டதாக புகார் | லஞ்சம் | தினமலர் |
| 156. | 25.12.09 | **சிவகங்கை மாவட்டம்:** கொல்லங்குடியை சேர்ந்தவர் காளிமுத்து பயிர் காப்பீடு திட்டத்தில் | லஞ்சம் | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பதிவு செய்வதற்கு வேளாண் அலுவலர் ஜேம்ஸ்(56) ரூ. 200 லஞ்சம் கேட்டதாக புகார். | | |
| 157. | 25.12.09 | **மதுரை மாவட்டம்:** அலங்காநல்லூர் பேரூராட்சிக்குட்பட்ட கரட்டுப் பகுதியில் அருந்ததிய மக்கள் வாழ்வதற்கு 25 வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டன தற்போது அந்த வீடுகள் இடிந்து விழும் நிலையில் உள்ளதாக புகார். | தலீத்துகள் மீதான வன்முறை | தீக்கதிர் |
| 158. | 26.12.09 | **மதுரை மாவட்டம்:** மதுரை அரசு போக்குவரத்து கழகத்தில் மஸ்டர் ரோல் (பணிப்பதிவோடு) ஊழலில் ஈடுபட்ட ஊழியர் ஒருவர் சஸ்பெண்ட செய்யப்பட்டார். | ஊழல் | தினமலர் |
| 159. | 26.12.09 | **தேனி மாவட்டம்:** அல்லிநகரத்தை சேர்ந்தவர் கோவிந்தராஜ் மகன் ரமேஷ்(32), மனைவி முத்துலெட்சமி (23), இவர்களது மகன் கோவர்த்தனன்(2), தனிக்குடித்தனம் செல்லும் பிரச்சனையால் இருவரும், குழந்தையுடன் மண்ணெண்ணெய் ஊற்றி தீ வைத்து கொண்டதாக புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமலர் |
| 160. | 26.12.09 | **மதுரை மாவட்டம்:** அவனியாபுரத்தில் உள்ள திருப்பரங்குன்றம் ரோட்டை சேர்ந்தவர் முருகன் மனைவி மீனாள்(28), முருகன் குடித்துவிட்டு வந்து மீனாளை தினமும் கொடுமை செய்ததாகவும் மனமுடைந்த மீனாள் தூக்கபோட்டு தற்கொலை செய்து கொண்டதாக புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினத்தந்தி |
| 161. | 26.12.09 | **அரியாலூர் மாவட்டம்:** அரியாலூர் அருகே அனுமதி பெறாமல் ஜல்லிக்கட்டு நடத்த முயன்றதால் பொதுமக்களுக்கும், போலீசாருக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. | காவலர்களுக்கு எதிரான வன்முறை | தினத்தந்தி |
| 162. | 26. 12.09 | **விழுப்புரம் மாவட்டம்:** வளவனூர் அருகே சொர்ணாவூர் சிறுமி பிரியதர்ஷினி (10, பெயர் மாற்றப்பட்டுள்ளது) அடையாளம் தெரியத ஒருவர் கத்தியை காட்டி கற்பழித்தாக புகார். | பாலியல் வன்முறை | மாலைமலர் |
| 163. | 26.12.09 | **திண்டுக்கல் மாவட்டம்:** சாணார் பட்டி அருகே உள்ளது வடக்காட்டுப்பட்டி சேர்ந்தவர் ஆரோக்கியசாமி(45), மனைவி கிரகவதி(40), பொதுப்பாதை தொடர்பாக ஊர்மக்களுக்கும் இவருக்கும் நடந்த தகராறில் மனைவி கண்டித்ததால் ஆத்திரம் அடைந்த ஆரோக்கியசாமி கிரகவதியை வெட்டினார் | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்முரசு |
| 164. | 26.12.09 | **திருப்பூர் மாவட்டம்:** பொங்கலூர் ஒன்றியம் கொடுவாய் கிராமத்தில் தலித் மக்களுக்கு முடி திருத்த மறுத்த தீண்டாமை சலூன் கடையை வாலிபர் சங்கத்தினர் ஆவேசத்துடன் முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினர். | தலீத்துகள் மீதான வன்முறை | தீக்கதிர் |
| 165. | 26.12.09 | **விருதுநகர் மாவட்டம்:** அருப்புக்கோட்டை அருகே 2 மாதங்களுக்கு முன்பு காதலனுடன் | பெண்களுக்கு எதிரான | மாலைமலர் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | சென்ற என்ஜினீயரிங் கல்லூரி மாணவி கற்பழிக்கப்பட்டார். காதலனை தாக்கிய பாலகிருஷ்ணன்(24), அடைக்கலம்(24) இருவரையும் போலிசார் கைது செய்தனர். | வன்முறை | |
| 166. | 27.12.09 | **விருதுநகர் மாவட்டம்:** மதுரையை அடுத்த விருதுநகர் அரசு போக்குவரத்து கழகத்திலும் மஸ்டர்ரோல் (பணிப்பதிவேடு) ஊழல். சஸ்பெண்ட் ஆன ஊழியருக்கு சம்பளம் கிடைக்க ஏற்பாடு செய்த அக்கவுன்டன்ட் ஹரிகிருஷ்ணமூர்த்தி சஸ்பெண்ட். | ஊழல் | தினமலர் |
| 167. | 27.12.09 | **கடலூர் மாவட்டம்:** திருப்பாதிரிப்புலியூரை சேர்ந்த நியமித்சந்த் ஜெயின் தனது கார்டை ஆய்வு செய்ய மனு தாக்கல் செய்தார். ஆசிரியர் முனிரத்தினம் (எ) ஜேம்ஸ், நியமித்சந்த் ஜெயின், கார்டை ஆய்வு செய்ய லஞ்சம் கேட்டதாக புகார். | லஞ்சம் | தினகரன் |
| 168. | 27.12.09 | **மதுரை மாவட்டம்:** மதுரையை சேர்ந்தவர் ஜெகதீசன் தமிழ்நாடு தொழில் வர்த்தக சங்க செயலர் கொன்னவாயன் சாலையில் கண்ணன் டிபார்ட்மென்ட் ஸ்டோர் இயங்கி வருகிறது. போலீஸ் ஏட்டு டேவிட் 15 பேருடன் வந்து கடையின் கேஷியர் சிவக்குமாரை தாக்கியதாக புகார். | காவல்நிலைய வன்முறை | தினமலர் |
| 169. | 27.12.09 | **மதுரை மாவட்டம்:** மதுரை மகபூப்பாளையத்தை சேர்ந்தவர் குதாபாய் மகள் ஹசீனாபானு(34), இவரது கணவர் ஷாஜகான்(37), கணவர் மற்றும் உறவினர் கூடுதல் வரதட்சனை கேட்டு துன்புறுத்துவதகா புகார்., | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமலர் |
| 170. | 27.12.09 | **நெல்லை மாவட்டம்:** கல்லிடைகுறிச்சி கோட்டை தெருவை சேர்ந்தவர் ராஜா(45), மனைவி வேலம்மாள்(40), வேலம்மாளுக்கு ஆண் குழந்தை பிறந்தது. ஒரு பெட்டிக்கடையில் பிறந்த ஆண் குழந்தையை விற்க கொடுத்திருப்பதாக புகார் | சிசுகளுக்கு எதிரான வன்முறை | தினமலர் |
| 171. | 27.12.09 | **மதுரை மாவட்டம்:** அனுப்பானடி பகுதியில் சோதனையின் போது மில்லில், 75 மூட்டைகள் ரேசன் அரிசியை மாவாக மாற்றுவதற்கு தயாராக இருந்ததை போலீசார் கைப்பற்றினர் | ரேசன் அரிசி கடத்தல் | தமிழ்சுடர் |
| 172. | 27.12.09 | **மதுரை மாவட்டம்:** அவனியாபுரத்தைச் சேர்ந்தவர் பூபதி மனைவி ஜெயபிரியா(20), திருமணம் ஆகி 6 மாதங்களே ஆன நிலையில் வயிற்றுவலி, நெஞ்சுவலியால் அவதியடைந்த இவர் தீக்குறித்து தற்கொலை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்முரசு |
| 173. | 28.12.09 | **சிவகங்கை மாவட்டம்:** புதுவயல் பகுதியில் உலக வங்கிநிதியில் வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்கும் திட்டம் செயல்பட்டு | ஊழல் | தினமலர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வருகிறது. குடிநீர் இணைப்பிற்கு 4.000 ஆயிரம் வசூலித்து ரூபாய் 16 லட்சம் மோசடி செய்த பில் கலெக்டர் ரவி சஸ்பெண்ட். | | |
| 174. | 28.12.09 | **சென்னை மாவட்டம்:** சூளைமேட்டை சேர்ந்தவர் மோனிஷா (பெயர் மாற்றப்பட்டுள்ளது) இவர் பிரபல வங்கியில் உதவி மானேஜராக பணியாற்றுகிறார். இவரை காரில் வந்த கும்பல் கடத்த முயன்றபோது பொதுமக்களால் காப்பற்றப்பட்டார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினத்தந்தி |
| 175. | 28.12.09 | **வேலூர் மாவட்டம்:** நாட்றம் பள்ளி அடுத்த திம்மாம்பேட்டை பள்ளத்தூரைச் சேர்ந்தவர் கருணாகர வெளிநாட்டில் வேலைக்கு சேர்ப்பதாக கூறி 13 பேரிடம் ரூ.1லட்சம் வாங்கியதாக புகார். | மோசடி | தினகரன் |
| 176. | 28.12.09 | **சிவகங்கை மாவட்டம்:** திருப்பத்தூர் அருகேயுள்ள மல்லாக்கோட்டை கிராமத்தை சேர்ந்தவர் ராஜேந்திரன் மகள் நித்யா என்ற நாகலெட்சுமி, கணவர் நீலகண்டன், கணவர் குடும்பத்தார் வரதட்சணைக் கொடுமையால் மனமுடைந்து தற்கொலை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்முரசு |
| 177. | 28.12.09 | **மதுரை மாவட்டம்:** மதுரை மேலூர் சாலையில் உள்ள உத்தங்குடி அய்யப்பன் கோவில் மண்டல பூஜை நடைபெற்றது. அனைத்து தெருக்களிலும் கோயில் தேர் உலா வந்தது தலித் மக்கள் தெருவிற்குள் தேர் வரவில்லை. குடையைத் தொட்ட தலித் மக்கள் தாக்கப்பட்டனர் | தலித்துகள் மீதான வன்முறை | தீக்கதிர் |
| 178. | 29.12.09 | **விருதுநகர் மாவட்டம்:** மனவளர்ச்சி குன்றியோருக்கு அரசு சார்பில் வழங்கப்படும் உதவித் தொகையை தர ரூ.17 லட்சம் வசூலிக்க திட்டமிட்ட அரசு ஊழியர்கள் பிரகாஷ், ராஜாமணி, உட்பட 4பேர் கைது. | லஞ்சம் | தினத்தந்தி |
| 179. | 29.12.09 | **மதுரை மாவட்டம்:** வில்லாபுரம் ஹவுசிங்போர்டை சேர்ந்தவர் பூபதி, மனைவி ஜெயபிரியா(19), திருமணம் ஆகி 6 மாதங்களை ஆன நிலையில் ஜெயபிரியா தீக்குளித்து தற்கொலை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமலர் |
| 180. | 29.12.09 | **கோவை மாவட்டம்:** சிங்காநல்லூர் இஎஸ்ஐ மருத்துவமனையில் டாக்டரான கவுனீஸ்(36), கணவர் இர்பான் முகமதுவும் டாக்டராக பணியாற்றி வருகிறார். கணவன் மனைவியிடையே ஏற்பட்ட தகராறில் கவுனீஸ் தற்கொலைக்கு முயன்றதாக புகார் | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினகரன் |
| 181. | 29.12.09 | **தேனி மாவட்டம்:** தேனி மாவட்டத்தில் அதிகளவில் மணல் கடத்தப்படுவதாக காவல்துறைக்கு தகவல் சோதனையில் பதினொட்டாம் கால்வாயில் இருந்து கடத்திவரப்பட்ட சுமார் 100 லோடு மணல் 4 இடங்களில் குவிக்கப்பட்டதை கண்டுபிடித்து | மணல் கடத்தல் | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பறிமுதல் செய்தனர். | | |
| 182. | 29.12.09 | **தூத்துக்குடி மாவட்டம்:** சிஐ.டியு மாநில மாநாட்டின் ஜோதிப் பயணம் நிகழ்ச்சிக்கு அனுமதி கேட்டு சி.ஐ.டியு தூத்துக்குடி மாவட்ட தலைவர் பொன்ராஜ், உதவி கண்காணிப்பாளர் அனில்குமார் கிரியைச் சந்திக்கச் சென்று மனுவை அளித்த போது அநாகரிகமாகப் பேசியதாக புகார். | காவல்நிலைய வன்முறை | தீக்கதிர் |
| 183. | 30.12.09 | **விருதுநகர் மாவட்டம்:** ராஜபாளையம் அருகே உள்ளது வேதநாயகபுரம் கிராமத்தை சேர்ந்தவர் சந்திரசேகர் (27), மனைவி இசக்கி(24), இவர்களுக்கு பிரதாப்(2),. வீட்டில் குழந்தை பிரதாப் தலையில் காயத்துடன் புதைக்கப்பட்டு இருந்தது. கண்டுபிடிக்கப்பட்டது. | குழந்தைகளுக்கு எதிரான வன்முறை | தினத்தந்தி |
| 184. | 30.12.09 | **வேலூர் மாவட்டம்:** அதிக சம்பளத்துக்கு ஆசைப்பட்டு வேலூர், கடலூர் மாவட்டத்தில் இருந்து மலேசியாவுக்கு வேலைக்கு சென்ற வாலிபர்கள் 29 பேர் கொத்தடிமையாக நடத்தப்பட்டு சித்திரவதைக்கு உள்ளனதாக புகார் | கொத்தடிமை | தினகரன் |
| 185. | 30.12.09 | **மதுரை மாவட்டம்:** திருப்பரங்குன்றம் திருநகர் பகுதியில் குழந்தை தொழிலாளர்கள் உள்ளனரா என அதிகாரிகள் சோதனை நடத்தினர். சதீஸ்குமார்(14), மணிகண்டன்(14), இருவரும் பணியில் இருந்தது மீட்கப்பட்டனர் | குழந்தை தொழிலாளர் ஒழிப்பு | தினமணி |
| 186. | 30.12.09 | **தர்மபுரி மாவட்டம்:** பெரியாம்பட்டியைச் சேர்ந்தவர் குமரேசன் மகள் சிந்து (21), மோகனகுமாரவேலு(55), கடத்தி சென்று 2–வது திருமணம் செய்யப்போவதாக மிரட்டியதாக புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினத்தந்தி |
| 187. | 30.12.09 | **மதுரை மாவட்டம்:** செங்கல் தொழிற்சாலையில் தரமான பணிச் சூழலை உருவாக்குவதன் மூலம், கொத்தடிமை முறையைத் தடுத்தல் திட்டத்தை தமிழகம் மூழுவதும் செயல்படுத்த வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. | கொத்தடிமை ஒழிப்பு | தீக்கதிர் |
| 188. | 31.12.09 | **ராமநாதபுரம் மாவட்டம்:** முதுகுளத்தூர் அருகே மகிண்டி குடியிருப்பை சேர்ந்த 5 குடும்பதாருக்கு அரசு இலவச நில பட்டா வழங்கியதை எதிர்த்து ஆதிக்க சாதியினர் அந்த குடும்பங்களை ஊரைவிட்டு ஒதுக்கியதாக புகார். | தலித்துகள் மீதான வன்முறை | தினமலர் |
| 189. | 31.12.09 | **திண்டுக்கல் மாவட்டம்:** பழனி மலைக்கோயில் விநாயகர் சன்னதி அருகே, பெண் குழந்தை ஒன்று அனாதையாக கிடந்தது. | சிசுகளுக்கு எதிரான வன்முறை | தினமலர் |
| 190. | 31.12.09 | **கோவை மாவட்டம்:** ஈரோடு மாவட்டம், | காவல்நிலைய | தினகரன் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | கோபிசெட்டிபாளையம் கரட்டிபாளையத்தை சேர்ந்தவர் முனியப்பன்(72), வழக்கில் சிறையில் இருந்த அவர் உடல்நலக்குறைவால் இறந்தார். | வன்முறை | |
| 191. | 31.12.09 | **ஈரோடு மாவட்டம்:** பெருந்துறை தாலுகா பெத்தாம்பாளையம் பேரூராட்சிக்குட்பட்ட செங்கோடம்பாளையம் கிராமத்தில் 40 ஆண்டுகளுக்கு முன் அமைக்கபப்ட்ட டிரான்ஸ்பார்ம் மிகவும் அபயகராமான நிலையில் உள்ளதாக பொதுமக்கள் புகார். | மின்வாரியதுறை அலட்சியம் | தீக்கதிர் |
| 192. | 31.12.09 | **திருச்சி மாவட்டம்:** துறையூர் அருகே கொட்டையூர் கிராமத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு டீ கடைகளில் இரட்டை கிளாஸ் முறை பயன்படுத்தப்படுவதும் செருப்பு அணிய மறுப்பதும், கோயிலுக்குள் செல்ல அனுமதி மறுக்கப்படுவதாக புகார். | தலித்மக்கள் மீதான வன்முறை | தீக்கதிர் |
| 193. | 31.12.09 | **திருச்சி மாவட்டம்:** திருச்சி மண்டல அலுவலகத்தல் புதிய பாஸ்போர்ட் பெறவும் புதுப்பிக்கவும் புரோக்கர்கள் வரிசையில் நின்றவர்களிடம் 100, 200, வாங்கிகொண்டு டோக்கன் கொடுத்து இருப்பது புகார் | லஞ்சம் | மாலைமலர் |
| 194. | 31.12.09 | **காஞ்சிபுரம் மாவட்டம்:** டோல்கேட் தெற்கு மாட வீதியில் ஸ்ரீகிருஷ்ணா நடு நிலைப்பள்ளியின் தாளாளர் ராஜகோபால் பெண் ஆசிரியர்களிடம் செக்ஸ் தொல்லை கெடுப்பதாக 14ஆசிரியர்கள் புகார். | பள்ளி வன்முறை | மாலைமலர் |
| 195. | 31.12.09 | **திருவள்ளூர் மாவட்டம்:** எல்லாபுரம் ஒன்றியம் கன்னிகாபுரத்தைச் சேர்ந்தவர் சுந்தரம் மகன் சரவணன்(25), மனைவி பொன்மலர்(23), பெற்றோர்கள் எதிர்ப்பை மீறி திருமணம் செய்து கொண்டனர். சரவணனை தாக்கிவிட்டு பொன்மலரை அவரது தந்தை மற்றும் உறவினர்கள் கடத்தியதாக போலீசில் புகார் | பெண்களுக்கு எதிரான வன்முறை | மாலைமலர் |
| 196. | 31.12.09 | **மதுரை மாவட்டம்:** ஒத்தக்கடையை சேர்ந்தவர் சிவக்குமார் மனைவி சந்தனதேவி(30), சிவக்குமார் மற்றும் குடும்பத்தார் வரதட்சனை கேட்டு சித்ரவதை செய்ததாக புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | மாலைமலர் |
| 197. | 31.12.09 | **சென்னை மாவட்டம்:** ஆலந்தூர் ரயில்வே நிலையம் சாலையைச் சேர்ந்தவர் மதுரநாயகம் மகள் ஜானகி (பெயர் மாற்றப்பட்டுள்ளது) 11 ம் வகுப்பு படித்து வந்தார். இன்னிலையில் பிரவீன் | பெண்களுக்கு எதிரான வன்முறை | மாலைமலர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | என்ற வாலிபருக்கு கட்டாய திருமணம் செய்து வைத்ததாக புகார். | | |
| 198. | 31.12.09 | **மதுரை மாவட்டம்:** பாலமேடு கிழக்கு தெருவைச் சேர்ந்தவர் பழனியம்மாள்(35), சதீஷ்யின் மனைவியும் சித்தாள் வேலைக்கு சென்றனர். பழனியம்மாள் சதீஷ் மனைவியிடம் கொத்தனாரை அனுசரிக்க சொன்னதால் ஆத்திரமடைந்த சதீஷ் பழனியம்மாளை கத்தியால் குத்தினார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்சுடர் |
| 199. | 31.12.09 | **ராமநாதபுரம் மாவட்டம்:** ரேஷனில் விநியோகிக்கப்படும் பொருட்களை வெளிமார்க்கட்டில் விற்பதாக தினைக்குளம் பகுதியில் நடத்தப்பட்ட சோதனையின் போது 3பேர் கைது செய்யப்பட்டனர். | ரேஷன் அரிசி கடத்தல் | தினகரன் |

மக்கள் கண்காணிப்பகம்